# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடைமுறைப்படுத்தும்

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்



வேலணை மத்திய கல்லூரியில் க. பொ. த. சாதாரண தரம் வரை கல்வி கற்று நல்ல பெறுபேற்றைப் பெறுபவர்களும் ஓரளவு வசதி படைத்தவர்களும் யாழ்ப் பாணத்திலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று விடுவது காலங்காலமாக நடைமுறையிலுள்ள நிகழ்வாகும்.

இதன் காரணமாக எமது கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவு நலிவடைந்து மிக வும் பின்தங்கிய நிலையிலுள்ளமை யினால் வறிய மாணவர்களுக்கு விஞ் ஞானக்கல்வி என்பது தொடர்ந்து எட்டாக்கனியாகவே உள்ளது.

மாணவர்களை எமது கல்லூரியில் கற்க வைப்பதற்கும் உண்மையிலேயே வறிய மாணவர்களுக்கு உதவுமுகமாக வும் எமது கல்லூரியின் தரத்தை மேம் படுத்தி விஞ்ஞானப்பிரிவினை வலுப் படுத்துதல் அவசியமாகும். ஆனால் இது எமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயமாகும். இருந்த போதும் இப் பெரும் கைங்கரியத்தினை நிறைவேற் றும் ஓர் பரீட்சார்த்த முயற்சியாகத் தற்போது விஞ்ஞானப்பிரிவில் கற்கும் வசதியற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப் பாக (யாழ்ப்பாணம் சென்று ரியூசன் கற்றலுக்கான) நிதியுதவி வழங்குவது அவசியமெனக் கருதி அதற்கான நிதியுதவித்திட்டம் ஒன்றை ஒக்ரோபர் 2012 முதல் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றோம்.

இதில் நாம் முதற்கட்ட வெற்றியையும் பெற்றுள்ளோம் என்பதனை தெரிவிப்ப தில் மகிழ்ச்சியும் பெருமையுமடை கின்றோம். கடந்த வருடம் உதவி பெற்ற ஐந்து மாணவர்களில் செல்வன் நகுலேஸ்வரன் சுதர்மன் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்திற்குத் தெரி வாகக்கூடிய (B, 2C) பெறுபேற்றைப் பெற்றுள்ளார். இது கல்லூரியின் தற்போதய வரலாற்றில் குறிப்பாக 1992 இடப் பெயர்வுக்குப் பின்னர் நீண்ட காலத்தின் பின்னர் நடைபெற்ற நிகழ்வு மட்டுமல்லக் கல்லூரியின் துரித வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டு மாகும் என்றால் அது மிகையல்ல. இதற்காகச் செல்வன் சுதர்மன் அவர் களுக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

இத்திட்டத்தின் மூலம் தற்போது பின்வரும் 6 க.பொ.த உயர்தர வகுப்பு விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் பயன் பெறுகின்றார்கள்.

சிறீகுமரன் கஜனன், உதயகுமார் கனி ஸ்ரன், மகேஸ்வரன் நிருசன், சிவகுமார் பவ்ஜா, குமார் துசாந்தினி, கஸ்மீர் லக்சினி.

மாணவர் ஒருவருக்கு மாதம் 2000.00 ரூபா வீதம் மாதாமாதம் 12,000.00 ரூபா நிதியுதவியை தற்போது வழங்கி வரு கின்றோம். இத்திட்டம் தொடங்கிய ஒக்ரோபர் - 2012 இலிருந்து மார்ச்- 2016 வரை மொத்தம் 4,484.00 டொலர் கள் வழங்கப்பட்டுள்ளது. உதவி பெறும் மாணவர்கள் அதிபர் திரு சிவ சாமி கிருபாகரன் மற்றும் உயிரியல் ஆசிரியை திருமதி நிருபா அருந்தவம் ஆகியோருடன் நிற்கும் காட்சி இத் துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெற்றிபுரியை அடைவதற்குச் சோத னைபுரத்தைக் கடந்து தான் செல்ல வேண்டும்.

**J/VELANAI CENTRAL COLLEGE**
**G.C.E A/L – 2015**

| Stream | Students Name | Results |
|---|---|---|
| Bio | N.Sutharman | B,2C |
| Maths | K.Vinoth | B,2S |
| Science & Technology | T.Yathurshan | B,2C |
| Science & Technology | S.Sinthusan | 3C |
| Science & Technology | T.Jayarathy | 3C |
| Science & Technology | M.Jasinthan | 3C |
| Science & Technology | V.Jeyaruban | C,2S |
| Science & Technology | T.Elilraj | C,2S |
| Science & Technology | J.Supaishan | C,2S |

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா

பிற்குறிப்பு:- சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் யூலை மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. விபரங்கள் பின்னர் அறி விக்கப்படும்.